அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 08/2014

எனது இலக்கம் : EST-7/TPORT/05/3521
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2014.12.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் கீழ் அரசாங்க வாகனங்களுக்கான காப்புறுதி**

மேற்படி விடயம் சம்பந்தமாக பொதுத் திறைசேரியின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 2007.12.18 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றறிக்கை PF/427 மற்றும் 2008.03.13 ஆந் திகதிய PF/427(1) மட்டுமன்றி, “அரசாங்க நிறுவனங்கள் தொடர்பாக பொது காப்புறுதித் தழுவு திட்டமான்றைத் தயாரித்தல்” எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட 2009.09.18 ஆந் திகதிய PF/437 ஐக் கொண்ட அரசாங்க நிதிச் சுற்றறிக்கை பற்றி தங்களது அவதானத்துக்கு உட்படுத்துகின்றேன்.

02. அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அனைத்து அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களும் தத்தமது நிறுவன தேவைப்பாடுகளுக்கு அமைய மோட்டார் வாகனங்களுக்கான காப்புறுதி, தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம் அல்லது வரையறுக்கப்பட்ட காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

03. எனினும், சில அரசாங்க நிறுவனங்கள் தமது நிறுவனங்களுக்கு உரிய மோட்டார் வாகனங்களை மேற்படி ஆலோனைகளின் படி காப்புறுதி செய்யாது விடுவதன் காரணமாக அவசர விபத்துக்களின் போது நட்டஈட்டை மீளப்பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

04. ஆதலால், மேலே முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க நிதி சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைய தங்களது நிறுவனத்துக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களை காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், இது தொடர்பாக மேலதிக விளக்கங்கள் தேவையாயின், அரசாங்க நிதிச் சுற்றறிக்கை PF/437 இன் 06 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய அரசாங்க நிதித் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளும்படி மேலும் அறியத் தருகின்றேன்.

05. இச்சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு